1972 ஏப்ரல் 1]

கிறித்துவ மத நிறுவனங்கள்.

*837 வினா—திரு. என். கிட்டப்பா, புலவர் சி. பழனிச்சாமி: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிறித்துவ மத ஸ்தாபனங்கள், மாதா கோயில்கள் ஆகியவற்றினைக் கண்காணிக்க தனியே ஒரு கிறித்துவ அறநிலையத்துறை அமைக்கப்பட்டிருக்கின்றதா?

(இ) இல்லையெனில், அந்த ஸ்தாபனங்களின் ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் எப்படிக் கண்காணிக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) கிறித்துவ மத ஸ்தாபனங்கள், மாதா கோயில்கள் ஆகியவற்றினைக் கண்காணிக்க ஒரு கிறித்துவ அறநிலையத் துறை அமைக்கப்படவில்லை.

(இ) கிறித்துவ தேவ ஆலயங்களின் சொத்துக்கள், அந்தந்த பகுதியில் உள்ள கிறித்துவ பாதிரிகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) அவையுரிமைக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1972-73-ம் ஆண்டுக்கான அவையுரிமைக் குழுவிற்கு (Committee of Privileges) தமிழ்நாடு சட்டப் பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு, கீழ்க்கண்ட பதினான்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்:—

1. திரு. ஏ. சுப்பிரமணியம்.
2. டாக்டர் எச். வி. ஹாண்டே.
3. திரு. கே. கந்தசாமி.
4. திரு. சோ. அழகர்சாமி.
5. திரு. கே. பி. கோபால்.
6. திருமதி ஜோதி வெங்கடாசலம்.